**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**MCOP No. 88/2023**

**2025ம் வருடம் ஜூன் மாதம் 17 ம் நாள் செவ்வாய்கிழமை**

**ம.சா.1 – போதுராஜா**

**முதல் விசாரணை தொடர்ச்சி :–**

நான் இந்த மனுவின் 1வது மனுதாரர் ஆவேன். எனது தரப்பு ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

1. சுமதி கொத்தனார் உதவியாளர் அட்டை நகல் வா.சா.ஆ. 20

(அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

எனது சாட்சியத்தை ஏற்று பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

பேருந்து நிறுத்தத்தில் நின்ற பின்பு அதில் ஏறி பயணம் செய்தோம். பேருந்தில் அமர்வதற்கு எனக்கும் எனது மனைவி மற்றும் குழந்தைகளுக்கும் இருக்கை இருந்தது. இருக்கையில் அமர்ந்து தான் பயணித்தோம். நாங்கள் பேருந்தின் நடுப்பகுதியில் அமர்ந்திருந்தோம். எனது மனைவி எனது பிள்ளைகளுடன் அமர்ந்திருந்தார். பேருந்தில் கூட்டம் அதிகமாக இருந்தது. பேருந்தில் கூட்டமாக இருப்பதால் பயணிகளை முன்னால் செல்லுங்கள் என்று நடத்துனர் கூறவில்லை. பேருந்து நிலையத்திற்கும் நான்குவழிச்சாலையிலிருந்து இணையும் இடத்திற்கும் சுமார் 200 அடி தூரம் இருக்கும் என்றால் இருக்காது. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.19 மாதிரி வரைபடத்தில் பேருந்து நிலையத்திற்கும் இணைப்புச்சாலைக்கும் சுமார் 200 அடி தூரம் உள்ளது என காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பேருந்து நிலையத்திலிருந்து

'ப' வடிவில் திரும்பி வந்தால் தான் இணைப்புச்சாலைக்கு வரமுடியும் என்றால் சரியல்ல. அதற்கு இடைப்பட்ட தூரம் சுமார் 200 அடி என்றால் சரியல்ல. விபத்தின் போது எனது மனைவி இருக்கையில் அமர்ந்து வரவில்லை படிக்கட்டில் நின்று வந்து நிலை தடுமாறி கீழே விழுந்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பேருந்தின் ஓட்டுனருக்கு விபத்து சமயத்தில் உரிய ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.20 ஆவணத்தின் அடிப்படையில் எனது மனைவி மாதம் முழுவதும் வேலைக்கு சென்றார் என்று கூறமுடியாது என்றால் சரிதான். 2வது மனுதாரருக்கு தற்போது 16 வயதாகிறது. 2ம் மனுதாரர் 11ம் வகுப்பு படித்து வருகிறார். 2ம் மனுதார் அரசு உதவி பெறும் பள்ளியில் படித்து வருகிறார். விபத்து சமயத்திலும் 2ம் மனுதாரர் அந்த பள்ளியில் தான் படித்து வந்தார். நான் தான் வேலை பார்த்து எனது குடும்பத்தை காப்பாற்றி வநதேன் என்றும் எனது மனைவி வேலைக்கு செல்லவில்லை என்றும் அதனால் நானும் எனது பிள்ளைகளும் எனது மனைவியை சார்ந்து இருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கொத்தனார் உதவியாளராக வேலை செய்து வருகிறேன். எனது மனைவியின் இறப்பினால் எங்களுக்கு எந்த வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் பேருந்தில் காப்பீடு விதிகளை மீறி அதிகமான பயணிகளை ஏற்றிச்சென்றதாலும் ஓட்டுனர் உரிய ஓட்டுனர் உரிமம் இல்லாமல் பேருந்தை இயக்கியதால் தான் விபத்து ஏற்பட்டது என்பதால் 3ம் எதிர்மனுதார் நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

இந்த விபத்து எனது மனைவியின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை